DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.64/2021**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : ஜோ பிரவீன்
Father/ Husband Name : சூசைராஜ்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 21.07.2025.

**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கல்லல் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக வேலை செய்கிறேன். எதிரி கருப்பையாவை தெரியும். கடந்த 29.11.2020ம் தேதி நான் திருவேகம்பத்தூர் காவல் நிலையத்தில் வேலை பார்த்து வந்த போது மதியம் ஹலோ போலீஸ் பணியில் இருந்தபோது வடக்கு போர்குடியில் சராதா என்பவர் கல் ஊன்றும் போது பிரச்சினை நடப்பதாக சொன்ன தகவலின்பேரில் சார்பு ஆய்வாளர் என்னையும், சிறப்பு சார்பு ஆய்வாளர் மோகன் அவர்களையும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்த சொன்னதன் பெயரில் அந்த இடத்திற்கு சென்று விசாரணை செய்து கொண்டிருந்த போது அப்போது எதிரி வந்து இடப்பிரச்சினையை நாங்கள் பேசி தீர்த்துக் கொள்வோம் நீங்கள் ஏன் வருகிறீர்கள் என்று சொன்னார்.

2. நாங்கள் எதிரியிடம் உங்களுக்கும் பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை, நாங்கள் பணிசெய்வதை தடுக்காதீர்கள் என்று சொன்னோம். அப்போது எதிரி மதுபோதையில் இருந்தார். அப்போது சம்பவத்தை வீடியோ பதிவு செய்ய எனது போனை எடுத்த போது மேலும் எதிரி கோபம் அடைந்து விட்டார். வீடியோ பதிவில் அவர் முகம் வந்துவிடக்கூடாது என்று என்னை கடந்து செல்வது போல் என் செல்போனை தட்டிவிட்டு விட்டார். நான் ஏன் இப்படி செய்கிறீர்கள்

என்று கேட்ட போது அவர் அதற்கு நான் யார் என்று உங்களுக்கு தெரியாது என்று சொன்னார். பின்னர் நான் விசாரணையில் சரித்திர பதிவேடு உள்ளவர் என்பது தெரியவந்தது. எதிரி என்னை ஆபாசமாக கெட்ட வார்த்தைகளால் திட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். பின்னர் ஊர்காரர்கள் விலக்கிவிட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் எந்த இடத்தில் பணியில் இருக்கும் போது போன் வந்தது என்றால் காவல் நிலையத்தில் இருக்கும் போது தகவல் வந்தது. என்னுடன் அப்போது காவல் நிலையத்தில் யார் உடன் இருந்தார்கள் என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் மோகன், சார்பு ஆய்வாளர் ஜெயமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தார்கள். என்னை அந்த இடத்திற்கு போக சொன்னது யார் என்றால் சார்பு ஆய்வாளர் ஜெயமூர்த்தி. நாங்கள் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பு எழுத்து பூர்வமான புகார் ஏதும் கொடுக்கப்பட்டிருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. எங்கள் காவல் நிலையத்தில் பொது நாட்குறிப்பேடு பராமரித்து வருகிறோம். அதில் அன்றைய தினம் பணிகளை குறிப்பிடுவார்கள் என்றால் ஆமாம், காலையிலேயே எழுதிவிடுவார்கள். அன்றைய தினம் பொது நாட்குறிப்பேட்டில் வடக்கு போர்குடி செல்வது சம்பந்தமாக பதிவு செய்தோமா என்றால் இல்லை. திருவேகம்பத்தூர் காவல் நிலையத்தில் இருந்து வடக்கு போர்குடிக்கு எத்தனை கி.மீ என்றால் 12 கி.மீ. சார்பு ஆய்வாளர் ஜெயமூர்த்தி என்ன சொல்லி பணிக்கு அனுப்பினார் என்றால் சாரதா என்ற பெண்ணுடன் 4,5பேர் பிரச்சினை செய்வதாக சொல்லி அனுப்பினார்.

3. நான் போகும் போது அங்கு எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சாரதாவுடன் சேர்த்து சுமார் 15 பேர் இருந்தார்கள். அந்த 15 பேரில் சாரதாவின் ஆதாரவாளர்களும், எதிர் தரப்பினரும் கலந்திருந்தார்கள். சாரதாவிற்கு ஆதாரவளர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் ஆதரவாளர்களும், எதிர்பாளர்களும் பாதி, பாதி இருந்தார்கள். நான் போகும் போது சம்பவ இடத்தில் கல்லுக் கால்கள் வைத்து ஊன்றிக் கொண்டிருந்தார்களா என்றால் இல்லை,

வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது. புகாரில் 15 பேர் நின்று வாக்குவாதம் செய்து கொண்டிருப்பதை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகாரில் என்ன அசிங்கமாக வார்த்தைகளால் சொன்னார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரி மதுபோதையில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

4. புகாரில் எதிரி வீடியோவில் முகம் தெரிந்து விடக்கூடாது என்பதற்காக என்னை கடந்து செல்வது போல் என்னை தள்ளிவிட்டதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை, ஆனால் தள்ளிவிட்டதாக சொல்லியுள்ளேன், தள்ளிவிட்டதன் நோக்கம் அது தான். நான் எத்தனை வினாடிக்கு வீடியோ பதிவு செய்தேன் என்றால் நான் எடுக்க முயற்சி செய்யும் போதே தள்ளிவிட்டு விட்டார். கீழே விழுந்த போனை மறுபடியும் எடுத்து வீடியோ பதிவு செய்ய முயற்சி செய்தோமா என்றால் இல்லை.

5. அதன் பின்னர் எதிரியை நானும், சிறப்பு சார்பு ஆய்வாளரும் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோமா என்றால் இல்லை, மதுபோதையில் இருந்ததால் அழைத்து செல்லவில்லை. அதன் பிறகாவது சிறிது நேரம் கழித்து காவல் நிலைத்திற்கு அழைத்து செல்ல முயற்சி செய்தோமா என்றால் ஊர்காரர்கள் சண்டையை விலக்கிவிட்டு அவரை அழைத்துச் சென்றுவிட்டார்கள். அழைத்து சென்ற ஊர்காரர்களின் பெயர் தெரியாது.

6. எதிரி கருப்பையா என்பவர் சம்பவம் நடைபெற்ற சில நாட்களுக்கு முன்பு தான் குண்டர் தடுப்பு சட்டத்தில் இருந்து வெளியில் வந்த விவரம் தெரியுமா என்றால் சம்பவத்தின் போது தெரியாது, தற்போது தான் தெரிந்து கொண்டேன். நான் சொல்வது போல் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றும் எதிரியை மீண்டும் சிறையில் அடைக்க வேண்டும் என்பதற்காக எங்கள் மேல் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் பொய்யாக புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் சொன்ன தேதியில் எதிரி வடக்கு போர்குடிக்கு வரவில்லை என்றும் எதிரிக்கு சாராதாவை யார் என்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னை அசிங்கமாக பேசவோ, கொலை மிரட்டல் விடுக்கவோ, அரசுப் பணியை செய்வதை தடுக்கவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** **இல்லை.**

S/d.D. **பூர்ணிமா.,**B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
**தேவகோட்டை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.64/2021**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : சாரதா
Father/ Husband Name : அழகப்பன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 21.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் வடக்கு போர்குடியில் குடியிருந்து வருகிறேன். எதிரியை தெரியாது. அ.சா.1 தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பிரச்சினை ஏதும் இல்லை.**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 29.11.2020ம் தேதி திருவேம்பத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 29.11.2020ம் தேதி மாலை கல்லுக்கால் ஊன்ற முற்பட்ட போது எதிரி அ.சா.1ஐ பணி செய்யவிடாமல் தடுத்தார் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது அ.சா.1ஐ எதிரி கொலை மிரட்டல் செய்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.